உ

52/4

அறவழி காட்டிய மூவர்

அறவழி காட்டிய மூவர்

52/4

(எழுதப் படிக்கத் தெரிந்தவர்க்கு ஏற்ற நூல்)

பேராசிரியர் சு. ந. சொக்கலிங்கம், எம்.ஏ.

பழனியப்பா பிரதர்ஸ்
சென்னை - 14 திருச்சி - 2 சேலம் - 1
கோயமுத்தூர் - 1 மதுரை - 1

முதற்பதிப்பு — டிசம்பர், 1973

விலை: ரூ. 1-80

அச்சிட்டோர் :
ஏஷியன் அச்சகம்,
சென்னை - 600 014.

முன்னுரை

எழுதப் படிக்கத் தெரியாத முதியோர்க்கு எழுத்தறிவு கற்பிப்பதில் தமிழக அரசு ஆர்வம் காட்டி வருகிறது. இளைஞர் அணி, இப் பணியைச் சீராக ஆற்றி வருகிறது.

எழுத்தறிவு பெறுவதற்கு நூல்கள் வேண்டும். எனவே, நம் அரசு 'முதியோர் எழுத்தறிவு நூல்' வெளியிட்டு வருவதை அனைவரும் அறிவர். இதுவரையில், மூன்று நூல்கள் வெளிவந்துள்ளன. நான்காம் நூல் விரைவில் வெளிவரும்.

அறவழி காட்டிய மூவர்களின் வரலாற்றைச் சுருக்கமாய் எழுதியுள்ளேன்; வயது வந்தவர்கள், இவற்றைக் கற்க வேண்டும்; இவர்கள் காட்டிய வழியில் நிற்க வேண்டும். இதுவே என் நோக்கம்.


இந்த நூலைப் பாங்குற வெளியிட்டுள்ள திருவாளர்கள் பழனியப்பா பிரதர்ஸ் பதிப்பாளர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசு ஒப்புதல் பெற்று எழுதியுள்ள இந்நூல் விற்பனையில் எனக்கு எவ்விதத் தொடர்புமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை-31,
18-12-'73.

சு. ந. சொக்கலிங்கம்

உள்ளுறை



1. இராமலிங்கர்

பெற்றோர் பெருமை

தமிழ் நாட்டிலுள்ள தென்னுர்க்காடு மாவட்டத்தில் மருதூர் என்னும் சிற்றூர் இருக்கிறது. அவ்வூரில் இராமையாப்பிள்ளை என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் தமிழ்ப்புலமை பெற்றவர்; சிறந்த சிவபக்தரும் ஆவார். 'பெரிய புராணம்', 'திருவாசகம்', 'திருமந்திரம்' ஆகியவை அவருக்கு மனப்பாடம். புராணச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவதிலும் வல்லவர் அவர்! புராணக் கதைகள் சொல்லி, அதன்மூலம் வரும் வருவாயைக்கொண்டே வாழ்க்கை நடத்தி வந்தார்.

அவருடைய மனைவியார் பெயர் சின்னம்மை யார். அம்மையார், கணவர் கருத்தறிந்து நடக்கும் உத்தமி; கள்ளமில்லாத வெள்ளை உள்ளம் படைத்தவர். இந்த அம்மையாருக்கு மூன்று மைந்தர்கள் பிறந்தனர்; ஒருவர் பெயர் சபாபதி; மற்றொருவர் பெயர் பரசுராமர்; மூன்றாவது மைந்தரே இராமலிங்கர்.

மூன்றாவதாகப் பிறந்த இராமலிங்கர் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து வந்தார். இளமையிலேயே அவர் வெகு அழகாகப் பேசினார்; அனைவரிடமும் அன்போடு பழகினார். அதைக் கண்டு குடும்பமே பெரிதும் மகிழ்ந்தது.

தந்தையார் மறைவு

ஓரிரு ஆண்டுகள் கழிந்தன. குடும்பத்தின் மகிழ்ச்சியைக் குலைத்த நிகழ்ச்சி ஒன்று நடந்தது. குடும்பத் தலைவர் இராமையா இறைவனடி சேர்ந்தார். தலைவரை இழந்த குடும்பம் மீளாத் துயரில் மூழ்கியது.

குடும்பத்தின் மூத்த பிள்ளை சபாபதி. அதனால் அவர் குடும்பத்தைக் காக்க வேண்டியதாயிற்று. பரம்பரைச் சொத்தோ, வருவாய்க்கான வேறு வழிகளோ இல்லை. எனவே, பிழைக்கும் வழி தேடி அவர் பொன்னேரிக்குப் புறப்பட்டார். இராமலிங்கமும் தமையனாருடன் பொன்னேரி சென்றார்.

தமையனார் சபாபதிப் பிள்ளை

சபாபதிப் பிள்ளை சிறிது காலமே பொன்னேரியில் தங்கி இருந்தார். பின்னர் அவர்கள் சென்னை சென்று குடியேறினர். இராமலிங்கமும் அவருடன் சென்னை சென்றார்.

சென்னையில் வாழ்ந்திருந்த காஞ்சிபுரம் சபாபதி முதலியாரிடம் சபாபதிப் பிள்ளை மாணவராய் இருந்து கல்வி கற்றார். இலக்கண, இலக்கியங்களில் வல்லவரானார். அது மட்டுமன்று; சொற்பொழிவு செய்யும் திறமையும் பெற்றார். பின்னர், தமிழாசிரியராகவும் பணிபுரிந்தார்.

ஆசிரியப் பணியில் சிறிதளவு வருவாய் மட்டுமே கிடைத்தது. சொற்பொழிவுகள் செய்வதன் வாயிலாக ஓரளவு வருமானம் வந்தது; அதனால் அவர் குடும்பம் நடத்தி வந்தார்.

கல்வி முயற்சி

சபாபதிப் பிள்ளை தம் தம்பி இராமலிங்கத்தை அன்புடன் வளர்த்து வந்தார். அவருக்கு வாய்த்த மனைவியார் பெயர் பாப்பாத்திஅம்மாள். அந்த அம்மையார் அன்பு மனம் கொண்டவர்; சிறுவரான இராமலிங்கத்தைத் தமது சொந்த மகனாகவே கருதி வந்தார். அண்ணனைவிட அண்ணியாரிடமே இராமலிங்கத்துக்குச் செல்லம் அதிகம்.

இராமலிங்கத்துக்குக் கல்வியில் சிறிதும் நாட்டம் இல்லை. சபாபதிப் பிள்ளையோ தம் தம்பிக்குத் தாமே கல்வி கற்பிக்க முயன்றார்; முடியவில்லை! அண்ணனிடம் இராமலிங்கம் ஒழுங்காகப் பாடங் கேட்பது இல்லை.

இராமலிங்கம் அடிக்கடி 'கந்த கோட்டம்' சென்று முருகனை வழிபடுவார். மேலும், அவர் சென்னையை அடுத்த திருவொற்றியூருக்கும் போய்விடுவார்.

இராமலிங்கம் சரியாகக் கல்வி கற்கவில்லை. ஆனால், இறைவனின் அருளால் அவர் அனைத்தும் அறிந்திருந்தார். கவி பாடும் திறம் அவரிடம் இயற்கையிலேயே அமைந்திருந்தது. மேலும், அவர் இனிமையான குரலையும் பெற்றிருந்தார். தெய்வத்திருவருள் இராமலிங்கத்திற்கு வாய்த்திருப்பதைச் சபாபதிப் பிள்ளை உணரவில்லை. பாப்பாத்தி அம்மாளோ அதனை நன்றாக அறிந்திருந்தார்.

சபாபதிப் பிள்ளை தம் ஆசிரியராகிய சபாபதி முதலியாரிடம் தமிழ் கற்க இராமலிங்கத்தை அனுப்பி வைத்தார். முதலியாரிடமும் இராமலிங்கம் ஒழுங்காகப் பாடம் கேட்கவில்லை. இராமலிங்கம் நாள்தோறும் கந்த கோட்டம் சென்றார்; கந்தனைக் கண்டு மனமுருகிப் பாடினார்.

தமையனாரின் கண்டிப்பு

கல்வி பயிலவேண்டிய பருவத்தில் தம் தம்பி கல்லாததை எண்ணி வருந்தினார் சபாபதிப்

பிள்ளை. தம்பியை அழைத்து அதட்டினுர்; அடித்தார். பயனில்லை. இராமலிங்கம் கல்வி கற்கவில்லை. எந்த நேரமும் கந்தனை வழிபட்டு வந்தார்.

தம்பிக்கு அறிவு புகட்ட வேண்டுமென்று சபாபதிப் பிள்ளை நினைத்தார். அவர் தம் மனைவியை அழைத்து, 'பாப்பாத்தி, இனி இராம லிங்கத்தை இந்த வீட்டில் நுழையவும் விடாதே! அவனுக்குச் சோறும் போடாதே!' என ஆணை யிட்டார்.

பாப்பாத்தி அம்மாளோ இளகிய மனம் உடையவர். இராமலிங்கத்தை உயிருக்கு உயிராக நேசிப்பவர். அந்தத் தாய்க்கு இராம லிங்கத்தைப் பட்டினி போட மனம் வருமா? இராமலிங்கம் வரும்போதெல்லாம் தம் கணவருக்குத் தெரியாமல் அன்போடு உணவு படைப்பார். அண்ணன் சொற்படி கல்வி கற்கக் கூடாதா எனக் கேட்பார். இராமலிங்கமோ பதிலொன்றும் கூருமல் சென்றுவிடுவார்.

அண்ணியாரின் அறிவுரை

ஒரு நாள் பாப்பாத்தி அம்மாள் இராம லிங்கத்தைப் பார்த்து, 'தம்பீ, உங்களைப் பார்த் தால் எனக்கு அழுகை வருகிறது. நீங்கள் அண்ணன் சொற்படி படிக்கக்கூடாதா? அண்ணன் வெறுப்புக்கு ஆளாகலாமா? உங்களைப் பட்டினிபோடவும் முடியவில்லை; கள்ளத் தனமாக உணவு படைப்பதை எண்ணி என் மனம்

துடிக்கிறது’ என்றார். இப்படிச் சொல்லும் போதே அந்த அம்மையார் அழுதுவிட்டார்.

அன்புள்ளம் கொண்ட அண்ணியாரின் அழுகை, இராமலிங்கத்தின் மனத்தை மாற்றி விட்டது. இராமலிங்கம் தம் அண்ணியாரைப் பார்த்து, ‘அம்மா, நான் கல்வி கற்கத் தயார். ஆனால், நான் யாரையும் குருவாக ஏற்க மாட்டேன். முருகனே என் குருநாதன். நான் அவரிடமே அனைத்தும் கற்பேன். மேல் மாடியில் இருக்கும் அறையை எனக்காக ஒதுக்கிக்கொடுங்கள். அங்கே நிலைக்கண்ணாடி ஒன்றைக் கொண்டு வந்து வையுங்கள். பூசனைக்குரிய பொருள்களையும் கொடுங்கள். நான் அங்கிருந்த வண்ணமே கல்வி கற்கிறேன். தயவுசெய்து எவரும் அந்த அறைக்கு வராதீர்கள்’ என்றார்.

இதைக் கேட்டு அண்ணியார் மகிழ்ந்தார். அவர் தம் கணவரிடம் செய்தியைக் கூறினார். சபாபதிப் பிள்ளையும் ஏற்பாட்டை வரவேற்றார்.

முருகன் திருவருள் !

மாடி அறை இராமலிங்கத்துக்கென ஒதுக்கித் தரப்பட்டது. இராமலிங்கம் அந்த அறையில் தங்கினார். எந்த நேரமும் கந்தனை எண்ணித் தியானத்தில் ஆழ்ந்த வண்ணம் இருந்து வந்தார்.

இராமலிங்கத்தின் பக்தி முருகனைக் கவர்ந்தது. முருகன் பல முறை நிலைக்கண்ணாடி

யில் இராமலிங்கத்துக்குக் காட்சி தந்தான். அக் காட்சியைக் கண்ட இராமலிங்கம் தம்மையே மறந்தார். முருகனின் அருளால் எல்லாக் கலை களையும் இராமலிங்கம் அறிந்துகொண்டார்.

புலமை வெளிப்படல்

இராமலிங்கத்தின் பெருமையை அனைவரும் அறியும் சந்தர்ப்பம் ஒன்று வந்தது. சபாபதிப் பிள்ளை ஓர் இடத்தில் தொடர்ந்து பெரிய புராணச் சொற்பொழிவு நடத்தி வந்தார். ஒரு நாள் அவருக்கு உடல் நலமில்லை. என்ன செய் வது எனச் சபாபதிக்குப் புரியவில்லை. பாப்பாத்தி அம்மாளோ, 'நமது இராமலிங்கரை அனுப்பலாம்' என்ருர். சபாபதி அதற்கு ஒப்புக் கொண்டு இராமலிங்கத்தை அழைத்தார். 'நீ சென்று பெரியபுராணப் பாடல்கள் இரண்டைப் பாடி வா' என்ருர். இராமலிங்கம் அவ்வாறே செய்வதாகச் சொல்லிச் சென்ருர்.

சென்ற இடத்தில் இராமலிங்கம் ஓர் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினுர். அவரது சொற் பொழிவைக் கேட்டுக் கூட்டத்தினர் மயங்கினர். சொற்பொழிவு இரவு நெடுநேரம் நீடித்தது. இராமலிங்கத்தின் புலமையைப் போற்ருதவர் களே அங்கு இல்லை எனலாம்.

தமையனுரின் பரிவு

மறுநாள் அந்தச் செய்தி சபாபதிப் பிள்ளைக்குத் தெரிய வந்தது. அவர் மனம்

மகிழ்ந்தார். மறுநாளும் இராமலிங்கரே சென்று சொற்பொழிவு நிகழ்த்தினார். சபாபதிப்பிள்ளை மறைந்து நின்று தம்பியின் சொற்பொழிவைக் கேட்டார். இராமலிங்கம் இறைவன் அருள் பெற்றவர் என்பதை அன்றே உணர்ந்தார். அன்று முதல் சபாபதி தம் தம்பியை அன்புடனும் மரியாதையுடனும் நடத்தலானார்.

இராமலிங்கரின் பெருமையை மக்கள் உணர்ந்துகொண்டனர்.

பற்றற்ற வாழ்க்கை

இராமலிங்கர் வழக்கம் போல் அடிக்கடி ‘கந்த கோட்டம்’ சென்று வந்தார். திருவொற்றியூருக்கும் சென்றார் ; இறைவன் மீது பாடல்களை மனம் உருகிப் பாடினார்.

பாடல்களைத் தவிர வேறு சில நூல்களையும் இராமலிங்கர் எழுதி வழங்கினார். ‘மனுமுறை கண்ட வாசகம்’ என்பது அவர் எழுதிய உரைநடை நூல். அது எளிமையும் இனிமையும் நிறைந்தது.

இராமலிங்கர் எந்தப் பொருள்மீதும் பற்று இல்லாதவர். உயிர்கள் மீது எல்லையில்லா அன்பு கொண்டவர். உயிர்க்கொலையை வெறுத்தவர். ஆசையை அறவே அறுத்தவர்.

பக்தி வழியில் மனைவி

திருமணம் செய்துகொள்வதை அவர் விரும்பவில்லை. அவருடைய தாயாரும் மற்றவர்

களும் வற்புறுத்தினர். தனக்கோட்டி என்னும் மங்கைக்கும் இராமலிங்கருக்கும் திருமணம் நடந்தது. அன்றிரவு இராமலிங்கரையும் அவர் துணைவியாரையும் பள்ளியறைக்கு அனுப்பினர். இராமலிங்கர் சிற்றின்பத்தை வெறுப்பவர்; இறைவனை அடைதலே பேரின்பம் என நினைப்பவர். அவரா இல்லற வாழ்வில் ஈடுபடுவார்? அவர் அன்று இரவு முழுவதும் திருவாசகம் படித்தார்; மனைவியைத் தாயாக எண்ணினார். அந்த அம்மையாரையும் சிறந்த பக்தையாக மாற்றினார்.

இராமலிங்கரின் மாணாக்கர்

இராமலிங்கர் பல திருத்தலங்களுக்குச் சென்றார். அங்கெல்லாம் குடிகொண்டு விளங்கும் இறைவனைப் பாடிப் பரவினார். இராமலிங்கருக்குப் பலர் மாணாக்கர் ஆயினர். அவர்கள் இராமலிங்கர் பாடிய பாடல்களைத் தொகுத்து எழுதினர்.

அறச்சாலை அமைத்தல்

பசிப்பிணி கொடியது; ஆகவே, பசியால் வாடிடும் மக்களுக்கு உணவு அளிக்க இராமலிங்கர் விரும்பினார். மேலும், அவர் மக்களுக்கு அன்பு நெறியின் உயர்வை விளக்கவும் விரும்பினார். இன்று பழுப்பு நிலக்கரியின் மூலம் புகழ் பெற்றுள்ள நெய்வேலிக்கு அருகிலுள்ள வடலூர் என்னும் சிற்றூரில் ஓர் அறச்சாலையை ஏற்படுத்தினார். அதற்கு அன்பர்கள்

ஓடோடி வந்து உதவினார்கள். பல காணி நிலம் தந்தார் ஒருவர். கொட்டகைபோடக் கீற்றுகள், மூங்கில்கள் தந்தார் மற்றொருவர். இன்னொருவர் மூட்டை மூட்டையாய் அரிசி அனுப்பினார். இப்படிப் பலரும் போட்டி போட்டுக் கொண்டு உதவினார்கள். இராமலிங்கரும் இறைவனின் அருளால் பொருளுதவி பெற்றார். விரைவில் அறச்சாலை அமைக்கப்பட்டது.

பசியால், பட்டினியால் வாடிய மக்கள் வடலூர் சென்றனர். வயிறார உணவு உண்டு மகிழ்ந்தனர். இராமலிங்கரின் பெருமை பட்டி தொட்டிகளெங்கும் பரவிற்று. பலர் விரும்பி வந்து இராமலிங்கரின் கொள்கையை ஏற்றனர்; சாதிசமய பேதங்களை வெறுத்தனர், உயிர்ப்பலி கொடுப்பதைத் தடுத்து நிறுத்தினர்.

திருவருளால் பெற்ற பேறு

இறைவன் இராமலிங்கர்மீது பேரன்பு கொண்டிருந்தார். பல இடங்களில் இறைவன் அவருக்குக் காட்சி தந்தார். இறையருளால் இராமலிங்கருக்குப் பல சித்திகள் கைவந்தன. மண்ணையும் பொன்னாக்கிவிடும் திறமையை அவர் பெற்றார். நினைத்த மாத்திரத்தில் அவரால் எதையும் செய்ய முடிந்தது. ஓர் இரவு முழுவதும் தண்ணீரைக்கொண்டே அவர் விளக்கு எரித்தார். பிணிகளைப் போக்கும் வல்லமையும் அவருக்குக் கிட்டிற்று.

ஆற்றல்கள் பல பெற்றிருந்தும் அவர் அடக்கமாக இருந்தார்; ஆணவம் இல்லாமல்

இருந்தார். ஆண்டவனை ஒருபோதும் மறவாமல் இருந்தார்.

இராமலிங்கர் திருவுள்ளம்

அவர் கருணை உள்ளம் படைத்தவர். வாடிய பயிரினைக் கண்டபோதெல்லாம் வாடினார். துன்பப்படும் உயிர்களைக் கண்டால் இராம லிங்கர் துடிதுடித்தார். உயிர்க்கொலைகள் புரிவதை மிகவும் வெறுத்தார். அதை எதிர்த்து ஓர் இயக்கமே நடத்தினார். இறைவனுக்கு உயிர்ப்பலிகள் கொடுப்பது தவறு என்றார். உயிர்ப்பலி நடக்கும் இடங்களுக்குச் சென்று மக்களுக்கு அறிவுரை கூறுவதைத் தம் கடமை எனக் கொண்டார்.

இராமலிங்கர் சமரசநோக்கம் கொண்டவர்; சாதிமத பேதங்களை வெறுப்பவர். மூடப் பழக்க வழக்கங்களை வன்மையாகக் கண்டிப்பவர்; 'கண் மூடிப் பழக்கமெல்லாம் மண்மூடிப் போகட்டும்' என்பார் அவர்.

'திருவருட்பா' போற்றப்படுதல்

இராமலிங்கருடைய பாடல்களை அன்பர்கள் தொகுத்தார்கள் அல்லவா? தொகுத்த திருவருட்பாப் பாடல்களை அவர்கள் அச்சிட்டு வெளியிட்டார்கள். திருவருட்பாவின் பெருமை யினை எங்கும் எடுத்துரைத்தார்கள். அந்த அருட்பாடல்கள் மக்களைக் கவர்ந்தன. அவரைத் திருவருட்பிரகாச வள்ளலார் எனப் போற்றிப் புகழ்ந்தனர்.

வடலூரில் வள்ளலார் ஜோதி

இராமலிங்கர் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து தமது பணியைச் செய்து வந்தார். வடலூரில் அறச்சாலை நன்கு நடைபெற்று வந்தது. இராமலிங்கரும் சொற்பொழிவுகள் ஆற்றுவதன்வாயிலாகத் தமது கொள்கைகளைப் பரப்பி வந்தார். 'ஜோதி' வழிபாட்டைத் தோற்றுவித்தார்.

'அருட்பெருஞ் ஜோதி; அருட்பெருஞ் ஜோதி;
அருட்பெருஞ் ஜோதி; தனிப்பெருங் கருணை'

என்னும் அற்புதத் திருவாக்கினை அன்பர்களுக்கு அருளினார்.


இறைவனுடன் கலந்தார்

அவர் இவ்வுலகில் தோன்றிய நோக்கம் முடியும் தருணம் வந்தது. அவர் அடிக்கடி அறை ஒன்றினுள் சென்று கதவை மூடிக்கொள்வது வழக்கம். பல நாள்கள் தியானத்தில் இருந்தார். பிறகு வெளியே வந்தார்.

இறுதியாக ஓர் இரவு அவர் அந்த அறையினுள் சென்றார். அது தை மாதம்; வெள்ளிக் கிழமை. அறையினுள் சென்று கதவைத் தாளிட்டுக்கொண்டார். அதன் பின்னர் அவர் வெளியில் வரவே இல்லை.

அரசு அதிகாரிகள் சென்று கதவை உடைத்துப் பார்த்தனர். அறையினுள் இராமலிங்கர் இல்லை. அவர் வந்த நோக்கம் முடிந்து விட்டது. அவர் இறைவனிடம் சென்றுவிட்டார்.

வடலூரில் அவர் நிறுவிய அறச்சாலை இன்னும் இருக்கிறது. வள்ளல் இராமலிங்கர் மறைந்துவிட்டார். அவருடைய உயரிய கொள்கைகள் இன்றும் வாழ்கின்றன; என்றும் வாழும். வடலூரில் இராமலிங்கர் ஏற்றிய திருவிளக்கு நந்தாவிளக்காய் உலகுக்கு ஒளி தந்துகொண்டிருக்கிறது.



2. இராமகிருஷ்ணர்

பெற்றோர்

பாரத நாட்டில் மக்கள் பலர் செறிந்து வாழும் கல்கத்தாவிற்கு அருகில் உள்ளது காமார்புகூர். அந்த ஊரில் குதீராம் சட்டர்ஜி என்பவர் வாழ்ந்து வந்தார். அவருடைய மனைவியார் பெயர் சந்திரமணி தேவியார். கணவர், மனைவி இருவருமே சிறந்த இராமபக்தர்கள். அவர்கள் குடும்பம் வறுமையில்சிக்கி உழன்றது; ஆயினும், நேர்மை தவறாமல் வாழ்ந்தார்கள். அதனால் அவ்வூர் மக்கள், அவர்களிடம் அன்பு காட்டினார்கள்; போற்றிப் பாராட்டினார்கள்.

குதீராமின் கயா யாத்திரை

இவர்களுக்கு இரண்டு பிள்ளைகளும் ஒரு மகளும் பிறந்தனர். குடும்பத்தில் போதிய பண வசதி இல்லை; இருந்தாலும் அவர்கள் மன நிறைவுடன் வாழ்க்கையினை நடத்தி வந்தனர்.

குதீராம் சட்டர்ஜிக்கு நெடுங்காலமாக ஓர் ஆசை இருந்து வந்தது. கயா, திருமால் குடிகொண்டிருக்கும் புண்ணிய நகரம். அங்கே செல்ல வேண்டும் என்பதே குதீராமின் ஆசை. ஆனால், கையிலோ காசு இல்லை; கடன் கொடுப்பார் யாருமில்லை. அதனால் பல ஆண்டுகள் அவரது ஆசை நிறைவேறவில்லை. வயதோ ஆகிக்கொண்டு வந்தது. வேறு வழியில்லாமல் கால்நடையாகவே கயா நகர் போய்ச் சேர்ந்தார்,

குதீராம் தாம் நெடுநாள்களாகக் காண விரும்பிய திருமாலைக் கண்ணாரக் கண்டார்; மனம் உருகினார். அன்றிரவு கயா நகரிலேயே தங்கினார்.

கனவுக் காட்சி

அப்போது அவர் ஒரு கனவு கண்டார். அவருடைய கனவில் திருமால் தோன்றினார். அவர் குதீராமைப் பார்த்து, 'உலகில் அறம் குறைந்து வருகிறது; அதர்மம் பெருகி வருகிறது. யாம் அறத்தைக் காக்க விரும்பி அவதரிக்கப் போகிறோம். உம்முடைய மகனாகப் பிறக்க எண்ணி உள்ளோம்,' என்று கூறி மறைந்தார். கனவு கலைந்தது. குதீராம் திடுக்கிட்டு எழுந்தார்.

'எல்லாம் இறைவன் திருவருள்' என்று தம்முள் கூறி மகிழ்ந்தார்.

கதாதரர் பிறந்தார்

சில நாள்கள் கழிந்தன. வழக்கம்போல் சந்திரமணி தேவியார் ஒரு நாள் சிவலிங்கத்தை வழிபட்டுக்கொண்டிருந்தார். அப்போது ஜோதி ஒன்று சிவலிங்கத்திடமிருந்து எழுந்தது; அது சந்திரமணி தேவியாரின் உடலுள் சென்று கலந்தது. அம்மையார் மூர்ச்சித்து விழுந்தார். இறைவனின் கருத்து என்ன என்பதை அறியாமல் தம்பதிகள் திகைத்தனர்.

பத்து மாதங்கள் சென்றபின்னர் சந்திரமணி அம்மையாருக்கு ஓர் ஆண் மகவு பிறந்தது. குதீராமும் சந்திரமணி தேவியாரும் பெரு மகிழ்ச்சி அடைந்தார்கள். தம் குழந்தைக்குக் கதாதரர் எனப் பெயர் சூட்டினர். கயாவில் இருக்கும் திருமாலின் பெயர் கதாதரர் என்பதாகும். அவருடைய அருளால் பிறந்த பிள்ளை அல்லவா? அதனால்தான் கதாதரர் எனத் திருப் பெயர் சூட்டினர்.

குழந்தைப் பருவம்

குழந்தை கதாதரர் கட்டழகு நிறைந்தவர். காண்பவரைக் கணத்தில் கவர்ந்துவிடும் கவர்ச்சி உடையவர். சிறு வயதில் அவர் குறும்புக்காரராகவே இருந்தார்; ஆயினும் இனிய பண்புகள் பெற்றிருந்தார்.

இளம் வயதிலேயே அவரிடம் கடவுள் பக்தி மிகுந்து காணப்பட்டது. அவர் களிமண்ணுல் கடவுள் வடிவங்களைச் செய்வார். அவற்றை வணங்கி மகிழ்வார்.

புராண, இதிகாசக் கதைகளைக் கேட்பதில் அவருக்கு விருப்பம் அதிகம். கதாதரருக்கு இயற்கையிலேயே இனிமையான குரல் வாய்த்திருந்தது. அவர் அடிக்கடி இனிமையாகப் பாடுவதும் உண்டு. அவர் பாடலைக் கேட்டவர்கள் மயங்கினுர்கள்; அவரைப் போற்றிப் பாராட்டினுர்கள்.

சிறுவயது முதலே கதாதரர் அச்சம் இன்றி விளங்கினுர். இருட்டிய பின்னரும் சுடுகாட்டுக்குச் சென்றுவரும் துணிவு அவரிடம் இருந்தது.

பள்ளிப் படிப்பிலும் பக்தி

பள்ளியில் அவரைச் சேர்த்தார்கள். ஆனுல், அவருக்குப் படிப்பில் சிறிதும் கவனம் செல்லவில்லை. கடவுளை வணங்குதல், பாடுதல், ஆடுதல் ஆகியவைகளே அவருக்குப் பிடித்தமானவை. நாடகங்களில் நடிப்பதிலும் கதாதரர் சிறந்து விளங்கினுர். காமார்ப்புகூரில் கதாதரரைத் தெரியாதவர் எவருமே இல்லை.

கதாதரரின் கல்கத்தா வருகை

இராமகுமார் என்பவர் கதாதரரின் தமையனுர். அவர் கல்கத்தாவில் வாழ்ந்து

வந்தார். அவர் வடமொழிப் புலவர்; சோதிடத்திலும் வல்லவர். கல்கத்தாவில் சில குடும்பங்களுக்கு இராமகுமார் பூசாரியாகவும் இருந்தார். இதன்மூலம் கிடைக்கும் வருவாயைக்கொண்டே குடும்பத்தை நடத்தி வந்தார்.

அவர் ஒருமுறை காமார்ப்புகூர் வந்தார்; தமது தம்பி படிக்காமல் ஊர் சுற்றுவதைக் கண்டார். தம்பிக்குச் சிறந்த கல்வியளிக்க வேண்டும் என நினைத்தார். ஆகவே, கதாதரரை அழைத்துக்கொண்டு கல்கத்தா திரும்பினார்.

பூசாரிப் பணி

கல்கத்தா வந்த பிறகும் கதாதரர் படிப்பில் அக்கறை காட்டவில்லை; கடவுளை வழிபடுதலையே அவர் நாடினார். ஆகவே, இராமகுமார் தாம் பார்த்து வந்த பூசாரிப் பணியைக் கதாதரரிடம் ஒப்படைத்தார். கதாதரருக்கு அந்தப் பணி மிகவும் பிடித்திருந்தது.

காளி கோவில் பூசை

தட்சணேசுவரம் என்பது வெள்ளம் பெருக்கெடுத்தோடும் கங்கை நதிக்கரையில் உள்ளது. இவ்வூர் கல்கத்தாவிலிருந்து சுமார் ஏழு கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. இங்கு ஒரு பெரிய காளிகோவில் கட்டப்பட்டது. இதைக் கட்டியவர் ஒரு ஜமீந்தாரிணி. அவர் பெயர் இராணி இராசாமணி என்பதாகும். அந்தக் கோவிலில் சிவன், சக்தி, திருமால் ஆகிய மூவருக்கும் வழிபாடு நடந்தது.

அந்தக் காளி கோவிலில் பூசை செய்வதற்கு ஒருவரைத் தேடிக்கொண்டிருந்தார்கள்; அனைவரும் அப்பணிக்குக் கதாதரரே தகுதி யானவர் என்று கூறினார்கள். கதாதரரே காளி கோவில் பூசைக்கு நியமிக்கப்பட்டார்.

ஆழ்ந்த பக்தியும் தியானமும்

கதாதரர் கடமையிலே கண்ணாக இருந்தார். பூசை செய்யும்போது அவர் தம்மையே மறந்து விடுவார். பூசை செய்யும்போதே காளி தேவியின் சந்நிதியில் மனமுருகி நின்றுவிடுவார்.

கோவில் எல்லைக்குள் ஒரு சோலை இருந்தது. அது ஓர் அடர்ந்த சோலை. அங்குச் செல்ல மக்கள் அஞ்சுவர். கதாதரரோ நள்ளிரவில் அங்குச் செல்வார். அமைதியாகத் தியானத்தில் ஆழ்ந்துவிடுவார்.

காளி தேவியின் அருட்காட்சி

காளி தேவியிடம் கதாதரர் கொண்ட பக்தி அளவு கடந்தது. கதாதரர் எந்த நேரமும் காளி தேவியை நினைத்து, 'அம்மா, அம்மா' என்று அழைப்பார். தாரைதாரையாகக் கண்ணீர் வடிப் பார்; கதறுவார். 'தாயே, நீ எனக்குக் காட்சி தரமாட்டாயா? என் வாழ்நாளில் இன்றும் வீணாகிவிட்டதே! உன்னைக் காணாமல் ஏங்கு கிறேனே' என்று கதாதரர் பரிதவிப்பார் .

பல நாள்கள் கழிந்தன. அன்னை காளி தேவி திருவருள் புரியவில்லை. கதாதரருக்குக் காட்சி தரவில்லை. வழக்கம் போல் ஒருநாள் அவர்

அம்மையை எண்ணி உருகினுர். தமக்குக் காட்சி தர வேண்டும் என்று மன்ருடினுர்; அழுதார்; அரற்றினுர். தாயின் மனம் கனியவில்லை. அவ்வளவுதான், கதாதரருக்குத் தம்மீதே வெறுப்பு மிகுந்தது. அவர் தம் அருகில் இருந்த வாளை எடுத்தார்; தம்மை மாய்த்துக்கொள்ள முயன்ருர்.

அன்னை மனம் கனிந்தாள். இன்னும் சோதிப்பது தகாது என்று நினைத்தாள். கதாதரருக்கு முன்னுல் தோன்றினுள். சோதி மயமான அன்னையை முதன் முதலில் கண்டதும் கதாதரர் மயங்கினுர்; மூர்ச்சையடைந்து விழுந்தார். எங்கும் ஒரே ஒளி மயம். பின்னர், கதாதரர் உணர்வு பெற்று, 'அம்மா, அம்மா' என்று அழைத்துக்கொண்டே எழுந்தார். அதற்குள் உலகநாயகி மறைந்துவிட்டாள்.

அன்னையின் திருவருள்

அன்னையின் அருள் வடிவம் அவர் மனத்தில் ஆழப் பதிந்துவிட்டது. இடையருது அன்னையைக் காண வேண்டும் என்னும் ஆசை எழுந்தது. அவர் எந்த நேரமும் அன்னையின் நினைவாகவே இருந்தார்; தம்மை மறந்தார்; உலகையும் மறந்தார். 'அம்மா, அருள் வடிவே! உன்னை ஒரு கணமும் காணுமல் வாழ முடியவில்லையே' என்று உருகினுர் அவர்!

கருணையே வடிவான காளி தேவி, கதாதரர் படும்பாட்டைக் கண்டாள். பலமுறை அவள் அவருக்குக் காட்சி தந்தாள்.

உண்மையை அறிந்தவர்கள் அவரைத் தெய்வப் பிறவி என்று போற்றினர். அறியாதவர்கள் அவரைப் பைத்தியம் என்றனர்.

திருமணம்

கதாதரரோ உலக பந்தங்களை அறுத்துத் தள்ளியவர். அவருக்குத் திருமணம் செய்து கொள்ள விருப்பமில்லை. எனினும், தம்மைப் பெற்ற தாயாரின் விருப்பத்தை நிறைவேற்ற விரும்பினார். திருமணத்திற்கு ஒப்புக் கொண்டார். அவருக்கும் ஆறு வயதுள்ள சாரதாதேவி என்பாருக்கும் திருமணம் நடந்தது. அவ்வளவுதான், பின்னர் அவர் தமது மனைவியாரை மாமனார் வீட்டில் விட்டுவிட்டு தட்சணேசுவரம் திரும்பினார்.

தட்சணேசுவரம் திரும்பிய கதாதரர் மீண்டும் தியானத்தில் அமர்ந்தார். அன்னை காளி தேவியின் காட்சிகளைக் கண்டு பேரின்பம் எய்தினார்.

இராமகிருஷ்ணர்

அதன் பின்னர் அவருக்கு இராமருடைய தரிசனம் கிடைத்தது; கண்ணனும் காட்சி தந்தான். அதனால், கதாதரர், இராமகிருஷ்ணர் என அழைக்கப்பட்டார்.

அம்மையின் இறை பக்தி

சாரதாமணி அம்மைக்கும் இராமகிருஷ்ணருக்கும் திருமணம் நடந்தது உண்மைதான்.

ஆனுல், அவர்கள் இருவரும் இல்லறம் நடத்த வில்லை. இராமகிருஷ்ணர் தட்சணேசுவரத்தில் இருந்தார். சாரதாமணி அம்மையார் தம் பெற்ருேர் வீட்டில் இருந்தார். எத்தனை நாள் களுக்குப் பெற்ருேர் வீட்டில் இருக்க இயலும்? அந்த அம்மையார் கணவன் அருகிலிருந்து சேவை செய்ய விரும்பினுர். அந்தச் சமயத்தில் இராமகிருஷ்ணரின் தாயாரும் மகன் அருகில் இருக்க ஆசைப்பட்டார். ஆகவே, இராம கிருஷ்ணரின் மனைவியாரும் தாயாரும் தட்சணே சுவரம் வந்து சேர்ந்தார்கள்.

இராமகிருஷ்ணர் தம்முடைய மனைவியாரை யும் தம் தாயாகவே மதித்தார். அவர் சிற்றின் பத்தை விரும்பவில்லை. அவர் சாரதாமணி அம்மையாரையும் சிறந்த பக்தையாக மாற்றி ஞர்; சிற்றின்பத்தை மறக்கும்படி உபதேசித் தார். சாரதாமணி அம்மையாரும் கணவர் கருத்தின்படியே நடப்பதாக உறுதி கூறிஞர்; கணவர் அருகில் இருந்து பணிவிடை செய்தார். இறை பக்தியில் நாளுக்குநாள் முன்னேறி வந்தார்.

இராமகிருஷ்ணரை நாடி வந்தவர்

மலரை நாடி வண்டுகள் வரும். கனிகளை விரும்பிப் பறவைகள் வரும். அதைப் போல், பேரின்ப வாழ்வு பெற விரும்பியவர்கள் இராம கிருஷ்ணரை நாடி வந்தனர். அங்ஙனம் வந்த வர்களுள் இளைஞரும் இருந்தனர்; முதியோரும் இருந்தனர்.

உலக மக்கள் மாயையிலிருந்து விடுபட வேண்டும்; எல்லாம் வல்ல இறைவனை நினைந்து உருக வேண்டும்; பிறவிப் பிணியை அறுக்க வேண்டும்; பேரின்ப வாழ்வு பெற வேண்டும். இதுவே இராமகிருஷ்ணரின் விருப்பம். அதற்காக மாணவர்களை ஒன்றுதிரட்ட வேண்டுமென அவர் நினைத்தார். பிரமசாரிகளே அப் பணிக்கு ஏற்றவர்கள் என்பது அவர் கருத்து.

சீடர் விவேகானந்தர்

இராமகிருஷ்ணரை நாடி வந்தவர்களுள் பலர் வாலிபர்கள்; மணமாகாதவர்கள்; அவர்களையெல்லாம் விரும்பிச் சீடர்களாக ஏற்றுக் கொண்டார். மனித குலத்துக்குச் செய்ய வேண்டிய தொண்டுகள் பற்றிக் கூறினார். அந்தப் பணிகளுக்கு அவர்களைத் தயார் செய்தார். அந்தச் சீடர்களுள் ஒருவர்தாம் விவேகானந்தர். தமது கொள்கைகளை விவேகானந்தரே உலகம் முழுவதும் பரப்புவார் என இராமகிருஷ்ணர் நினைத்தார். அதுபற்றி விவேகானந்தரிடமும் கூறினார். அவருடைய விருப்பத்தை நிறைவேற்றுவதாகவும் விவேகானந்தர் வாக்களித்தார்.

பெருநோக்கம்

இராமகிருஷ்ணர் அன்னை பராசக்தியின் அருளால் பல சித்திகளைப் பெற்றிருந்தார். ஆயினும், அவர் அவற்றைப் பயன்படுத்த

வில்லை. அவற்றைக்கொண்டு மற்றவரைக் கவரவும் விரும்பவில்லை. அவர் பொன்னையும் மண்ணையும் ஒன்றாகவே மதித்தார்; ஏழையையும் பணக்காரனையும் சமமாகவே பாவித்தார். எல்லா உயிர்களிலும் இறைவனையே கண்டார். மனித குலம் முழுவதும் இறைவனை நாடி மோட்சம் அடைய வேண்டும். இதுவே அவரது குறிக்கோளாக இருந்தது.

இறுதி நாள்

அன்னை பராசக்தியின் சேவையிலே ஈடுபட்ட இராமகிருஷ்ணருக்கு ஒரு முறை தொண்டையில் நோய் வந்தது. மருத்துவம் பார்க்கப்பட்டது. ஆனால், அவர் உடல் தேறவில்லை.

மாணவர்களும், சாரதாமணி அம்மையாரும் அருகிலிருந்து அண்ணலுக்குப் பணிவிடை செய்தார்கள். ஆனால், உடல் நாளுக்கு நாள் சீர்கெட்டு வந்தது. வாழ்வின் இறுதி நாள் நெருங்கி வருவதை இராமகிருஷ்ணர் உணர்ந்தார். மாணவர்களை அழைத்து அறிவுரை கூறினார். மக்களுக்குத் தொண்டு செய்வது எப்படி என்பதை விளக்கிக் கூறினார்; எதிர்காலத்தில் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்தும் சொன்னார்.

விவேகானந்தருக்கு இராமகிருஷ்ணர் சமாதிநிலை குறித்துத் தனியே விளக்கினார். உலகத்தில் தருமத்தை நிலைநாட்ட வேண்டும் என ஆணையிட்டார். விவேகானந்தரும் அவ்

வாறே செய்வதாக உறுதி கூறினார். இராம கிருஷ்ண பரமஹம்சர் மன நிறைவு பெற்றார். அதன் பிறகு, அவர் தமது பூதவுடலை நீத்தார்; இறைவனோடு இரண்டறக் கலந்தார்.


துறவியர் தொண்டு

இராமகிருஷ்ணர் பெயரால் உலகின் பல பகுதிகளில் மடங்கள் பல இயங்கி வருகின்றன. அவை ஆற்றும் தொண்டுகள் போற்றற் குரியவை. ஏதாவது ஒரு பகுதியில் வெள்ளம் வந்தால் போதும், உடனே இராமகிருஷ்ண மடத்துத் துறவிகள் அங்கு விரைந்து செல் கின்றனர். வெள்ளக்கொடுமையால் அல்லல் படும் மாந்தர்தம் துயர் துடைக்கின்றனர். கொள்ளை நோய்கள் பரவி வருவதை அறிந்தால் போதும். இராமகிருஷ்ண மடத்துத் துறவிகள் அங்கே விரைந்து செல்கின்றனர். நோயால் நலிவோர்க்கு மருந்துகள் வழங்குகின்றனர். நோய் பரவாமல் தடுக்கும் பணியில் முனைந்து ஈடுபடுகின்றனர். புயலால் சேதமடைந்த பகுதி களிலும் இராமகிருஷ்ண மடத்துச் சந்நியாசி களைக் காணலாம். கோரப் புயலின் கொடுமைக்கு ஆளானோர்க்கு அனைத்து உதவி யும் புரிகின்றனர்; துயர் களைகின்றனர்.

பள்ளிகள், கல்லூரிகள், தொழிற்பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றை நடத்துவதிலும் இராமகிருஷ்ண மடங்கள் முன்னணியில் நிற்கின்

றன. அறியாமை நோய் களைய அவர்கள் செய்யும் தொண்டு ஈடு இணையற்றது.

இராமகிருஷ்ண மடங்கள் உடல் நோய்களை அகற்றிட மருத்துவ மனைகளையும் நடத்துகின்றன. ஆம்! இலவச மருத்துவ மனைகளை இயக்குகின்றன; பிணியாளர் படும் அவதிகளை நீக்குகின்றன. மக்கள் நலத்தோடும் உடல் வளத்தோடும் வாழ்வதற்குப் பலவகைப் பணிகளைச் செய்கின்றன.



3. விவேகானந்தர்

பெற்ருேர்

இந்தியப் பெருநாட்டில் வங்காள மொழி பேசும் மக்கள் வாழும் மாநிலம் வங்காளம் ஆகும். இங்கே மக்கள்தொகை மிகுந்த கல்கத்தாவில் விசுவநாத தத்தர் என்பார் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் சிறந்த அறிவாளி; நல்ல குணசாலி; கடவுள் பக்தி மிகுந்தவர்.

அவருடைய மனைவியார் பெயர் புவனேசுவரி அம்மையார். அவர் நற்பண்புகள் அனைத்தும் வாய்ந்தவர். காசி விசுவநாதரிடம் கரை கடந்த பக்தி உடையவர். மகாபாரதம், இராமாயணம் ஆகிய இதிகாசங்களை மிக நன்ருகப் படித்தவர்.

நரேந்திரரின் தோற்றம்

விசுவநாதருக்கும் புவனேசுவரி அம்மையாருக்கும் இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தன. பெற்ருேர் ஆண் குழந்தை இல்லாததை நினைத்து மிகவும் கவலை கொண்டனர். இருவரும் காசி விசுவநாதரிடம் பிள்ளை வரம் வேண்டினர். புவனேசுவரி அம்மையாரோ விரதங்கள் பலவற்றை மேற்கொண்டார்.

ஆண்டுகள் சில கழிந்தன. இறுதியில் சிவனருளால் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. பெற்ருேர் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

அந்தக் குழந்தைக்கு அவர்கள் நரேந்திரர் எனப் பெயர் சூட்டினுர்கள்; குழந்தையை அன்புடன் வளர்த்து வந்தார்கள்.

குழந்தைப் பருவம்

புவனேசுவரி அம்மையார் புராண இதிகாசங்களை அறிந்தவர் அல்லரா? அவர் தமது மைந்தருக்கு அவற்றைக் கதை கதையாக எடுத்துச் சொல்வார். நரேந்திரர் அக் கதைகளையெல்லாம் கவனமாகக் கேட்டு வந்தார்.

இராமாயணக் கதையை அந்த அம்மையார் பல முறை கூறியிருக்கிருர். நரேந்திரரும் அதை அலுக்காமல் சலிக்காமல் கேட்டிருக்கிருர். சீதை, இராமர் ஆகிய இருவருடைய பண்பு நலன்களும் சிறுவர் நரேந்திரரை மிகவும் கவர்ந்தன.

சீதையும் இராமரும், நரேந்திரர் இதயத்தில் நீங்கா இடம் பெற்றுவிட்டனர்.

பூசையும் தியானமும்

சிறுவராக இருந்தபோது நரேந்திரருக்குச் சிலை ஒன்று கிடைத்தது. அது ஓர் அழகிய சீதா – இராமர் சிலை. நரேந்திரர் அந்தச் சிலையை மனமார நேசித்தார்; நாள்தோறும் பூசித்தார்.

தியானம் செய்வது சிறந்த பழக்கம். சிறுவர் நரேந்திரரிடம் அந்தப் பழக்கம் இளமை முதலே இருந்து வந்தது. தொடர்ந்து பல மணி நேரம் அவர் தியானத்தில் ஆழ்ந்துவிடுவதும் உண்டு. அதைக் கண்டு அவருடைய பெற்றோர் கள் வியப்படைந்திருக்கின்றனர்.

கல்வியில் சிறப்புறுதல்

தக்க பருவம் வந்ததும் நரேந்திரரைத் தொடக்கப்பள்ளியில் சேர்த்தார்கள். கல்வியில் நரேந்திரர் சிறந்து விளங்கினார். நினைவு ஆற்ற லில் நரேந்திரரை எவராலும் வெல்ல இயல வில்லை. அதையறிந்து ஆசிரியரே பல முறை நரேந்திரரைப் பாராட்டியுள்ளார்.

உயர்நிலைப் பள்ளியிலும் நரேந்திரர் படிப் பில் சிறந்து விளங்கினார்; ஆங்கில மொழியில் தேர்ந்த புலமையும் பெற்றார். மூன்றாண்டுகள் கற்க வேண்டிய பாடங்களை ஓராண்டில் படிக்க

நேர்ந்தது. அப்போதும் அவர் முதல் வகுப்பில் தேர்வு பெற்ருர்; அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினுர்.

கல்லூரியிலும் நரேந்திரர் சோடை போக வில்லை. கல்லூரியில் படிக்கும்போது அறிவு தரும் நூல்கள் பலவற்றைப் படித்தார். ஆம்! பாட நூல்களை அன்றி வேறு இனிய நூல்களை யும் படித்தார்; தத்துவ நூல்களையும் வரலாற்று நூல்களையும் விரும்பிக் கற்ருர்.

கல்வியில் மட்டுமா அவர் கவனம் செலுத்தி னுர்? உடலை ஓம்புவதிலும் அவர் அக்கறை காட்டினுர். மற்போர், சிலம்பம் ஆகியவற்றி லும் தேர்ச்சி பெற்ருர். இசை பாடுவதிலும் நரேந்திரர் வல்லவராய்த் திகழ்ந்தார்.

பி.ஏ. பட்டதாரியானதும் சட்டக் கல்வி கற்க வேண்டும் என்பது நரேந்திரருடைய விருப்பம். தந்தை விசுவநாத தத்தரும் இதனையே விரும்பி வரவேற்ருர். நரேந்திரர் சட்டக் கல்லூரியில் சேர்ந்து படிக்கலானுர்.

அந்தச் சமயத்தில் திடீரென்று விசுவநாதர் இறைவனடி சேர்ந்தார்; குடும்பம் துயரில் ஆழ்ந்தது; வறுமையில் மூழ்கியது.

இருப்பினும், நரேந்திரர் தொடர்ந்து சட்டக் கல்வி பயின்று வந்தார்.

கடவுளைக் காணும் விருப்பம்

அப்போது அவருடைய மனத்தில் பெரும் ஐயம் எழுந்தது. 'கடவுளை நேரில் காண முடியுமா? கடவுளை நேரில் கண்டவர்கள் இருக்கிறார்களா?' இவையே அவர் மனத்தை வாட்டிய வினாக்களாகும்.

பல சான்றோர்களை அணுகிய நரேந்திரர் அவர்களிடமெல்லாம் அதே கேள்விகளைக் கேட்டார். ஆனால், எவரும் அவருக்குச் சரியான விடையளிக்கவில்லை.

எனினும், நரேந்திரர் அயரவில்லை. அவர் தொடர்ந்து தமது கேள்விகளைக் கேட்டுவந்தார். ஆனால், பதில் மட்டும் கிடைக்கவே இல்லை.

இராமகிருஷ்ணரைச் சந்தித்தல்

அப்போது அவர் இராமகிருஷ்ணரைப் பற்றிக் கேள்வியுற்றார். 'இராமகிருஷ்ணர் கடவுளை நேரில் கண்டவர்' என்று கூறக் கேட்டார். உடனே நரேந்திரர் ஓடோடிச் சென்று இராமகிருஷ்ணரைக் கண்டார்.

நரேந்திரரைக் கண்ட இராமகிருஷ்ணர் பேருவகை எய்தினார். அவர் நரேந்திரரைப் பார்த்து, 'குழந்தாய், வா! உனக்காக நான் எத்தனை நாள் காத்திருப்பது?' என்று அன்போடு கேட்டார்.

அதைக் கேட்ட நரேந்திரர் திடுக்கிட்டார். இருப்பினும், அதை வெளியே காட்டிக்கொள்ள

வில்லை. அவர் இராமகிருஷ்ணரைப் பார்த்து, 'நீங்கள் கடவுளை நேரில் கண்டது உண்டா?' என்று கேட்டார்.

மற்றவர்களைப் போல் இராமகிருஷ்ணர் மயங்கவும் இல்லை; தயங்கவும் இல்லை. அவர் புன்முறுவலோடு நரேந்திரரைப் பார்த்து, 'குழந்தாய், கடவுளை நான் இடையருமல் கண்டு வருகிறேன். உன்னை என் ஊனக்கண்களால் பார்க்கின்றேன். கடவுளையோ மனக்கண்ணுல் காண்கிறேன். நீ விரும்பினுல் உனக்கும் அவரைக் காட்டுவேன்,' எனத் தெளிவாகச் சொன்னுர்.

இத்தகைய பதிலைக் கேட்ட நரேந்திரர் வியப் புற்ருர்; மலைப்படைந்தார். சட்டக்கல்வி கற்பவர் அல்லரா? ஆகவே, அவர் இராமகிருஷ்ணர் கூறியதை எளிதில் நம்பிவிடவில்லை. பிறகு, குழப்பத்துடன் வீடு திரும்பிவிட்டார்.

சமாதி நிலையும் கடவுட் காட்சியும்

இராமகிருஷ்ணரைப் பார்க்காமல் இருக்க நரேந்திரரால் முடியவில்லை. மீண்டும் இராம கிருஷ்ணரைச் சந்தித்தார்; உரையாடினுர்; மனநிறைவு பெருமலேயே வீடு திரும்பினுர்.

வீட்டுக்கு வந்ததும் அவரால் வாளா இருக்க முடியவில்லை. மூன்ரும் முறையும் அவர் சென்ருர். இராமகிருஷ்ணரைக் கண்டார்; பேசிப் பேசி அளவிலா ஆனந்தம் அடைந்தார்.

அந்தச் சமயத்தில் ஓர் அற்புதம் நிகழ்ந்தது. இராமகிருஷ்ணர் திடீரென்று தமது வலக்கரத்தை நரேந்திரரின் நெஞ்சில் வைத்தார். 'ஆ! என்ன செய்கிறீர்கள்?' என்று நரேந்திரர் கேட்டார்; அடுத்த கணமே தம்மை மறந்தார்; சமாதி நிலையை அடைந்தார்; கடவுளைக் காணும் நற்பேறு பெற்றார்.

பிறகு, நரேந்திரர் இராமகிருஷ்ணரின் சீடரானார்; தத்துவங்கள் பலவற்றைக் கற்றுத் தேர்ந்தார். உலகப் பற்றொழித்தார்.

நரேந்திரர் விவேகானந்தர் ஆனார்

தமக்குப் பிறகு தகுந்த வாரிசாக விளங்கக் கூடியவர் நரேந்திரரே என இராமகிருஷ்ணர் உணர்ந்தார். நரேந்திரருக்குச் சந்நியாசம் வழங்கினார். நரேந்திரருக்கு 'விவேகானந்தர்' என்னும் திருநாமம் வழங்கப்பட்டது. விவேகானந்தர் துறவறம் ஏற்றமையால் காவி உடை தரித்தார்; உலக பந்தபாசங்களை அறவே ஒழித்தார். அது மட்டுமா? இளந்துறவிகளின் தலைவராகவும் விவேகானந்தர் நியமிக்கப் பெற்றார்.

குரு இராமகிருஷ்ணரின் கட்டளை

'உலக மாந்தரை அறவழியில் திருப்ப வேண்டும்; அவர்களும் பிறவியின் பயனை அடைய வேண்டும்; முக்தி பெறும் மார்க்கத்தை அறிய வேண்டும். அதுவே உன் பணியாகும்.

அதன் பிறகே நீ முக்தி நிலையை அடைவாய்' என்று இராமகிருஷ்ணர் விவேகானந்தரிடம் உணர்ச்சியோடு கூறினர்.

குருநாதரின் சொற்படியே நடப்பது என விவேகானந்தர் முடிவு செய்தார்.

இராமகிருஷ்ணர் சமாதி நிலை அடைவதற்கு முன்னர் விவேகானந்தரைத் தனியாக அழைத்து உரையாடினர்; சமாதி நிலை அடைவது பற்றிப் பயிற்சியளித்தார்; தமது மறைவுக்குப் பின்னர் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிச் சொன்னர்.

குருநாதர் கூறியபடியே நடப்பதாக விவேகானந்தர் வாக்குறுதி அளித்தார். இராமகிருஷ்ணரோ தமது பணி தொடர்ந்து நடைபெறும் என்று நம்பினர்; மன நிறைவோடு இறைவனடி சேர்ந்தார்.

சீடர் தலைவர்

இராமகிருஷ்ணரின் பக்தி மார்க்கத்தை உலகம் முழுவதும் பரப்ப வேண்டும். மக்களைப் பக்தி நெறிக்குத் திருப்ப வேண்டும். அனைத்து மாந்தரும் முக்தி நிலை அடைய உதவ வேண்டும். இதுவே இராமகிருஷ்ணருடைய சீடர்களின் உறுதியான முடிவாக இருந்தது. அதனை நிறைவேற்றும் மாபெரும் பணிக்கு விவேகானந்தரே தலைவர். அந்தப் பொறுப்பை விவேகானந்தர் விருப்புடன் ஏற்றுக்கொண்டார்.

விவேகானந்தரின் சுற்றுப்பயணம்

விவேகானந்தர், இமய முதல் குமரி வரை பரவியுள்ள தமது தாய்நாட்டைச் சுற்றிப் பார்க்கும் பயணத்தைத் தொடங்கினுர்.

விவேகானந்தர் இமயமலைச்சாரலை அடைந்தார். அங்குச் சில நாள்கள் தங்கியிருந்தார். பின்னர், டில்லி வந்தார். அங்கிருந்து இராஜபுதனம் சென்றுர்.

இராஜபுதன நிகழ்ச்சி

விவேகானந்தர் இராஜபுதனத்தில் தங்கி இருந்தபோது ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. அந்நிகழ்ச்சி அவருடைய பெருமையை உலகுக்கு உணர்த்திற்று.

இராஜபுதனத்தில் ஆழ்வார் என்பது ஒரு சமஸ்தானம். அந்தச் சமஸ்தானத்தின் மன்னர் விவேகானந்தரைப் பற்றிக் கேள்விப்பட்டார்; விவேகானந்தரைக் கண்டு, அன்போடு அரண்மனைக்கு அழைத்து வந்து உபசரித்தார். இருவரும் உரையாடிக்கொண்டு இருந்தார்கள்.

அப்போது, 'சுவாமிகளே! விக்கிரகங்களை வணங்குவதில் எனக்கு விருப்பமில்லை, பாமரர் போல் கல்லையும் மண்ணையும் உலோகத்தையும் நான் வணங்குவது இல்லை,' என்று ஆணவத்துடன் மன்னர் கூறினுர்.

'ஓ, அப்படியா! அது உங்கள் கொள்கை. அவரவர் கொள்கைப்படி நடந்துகொள்ளலாம்' என்று விவேகானந்தர் கூறினர்.

அவருடைய பதில் மன்னருக்குச் சுவை யற்றதுபோல் இருந்தது போலும்! ஆனால், சிறிது நேரத்தில் சுவாமிகள், அந்நிலைமையை அடியோடு மாற்றிவிட்டார். அங்கே சுவரில் மாட்டப்பட்டிருந்த மன்னருடைய உருவப்படம் ஒன்றை எடுத்துவரச் சொன்னர். எடுத்து வந்ததும், அரசருடன் இருந்தவர்களை அழைத்து, 'இந்தப் படத்தின்மீது காறி உமிழுங்கள்' என்றார்.

அதைக் கேட்டு அனைவரும் திடுக்கிட்டார் கள்; காறி உமிழ மறுத்துவிட்டார்கள்.

சுவாமிகள் அவர்களைப் பார்த்து, 'ஏன் மறுக்கிறீர்கள்? கண்ணாடியும் காகிதமுந்தானே இந்தப் படத்தில் இருக்கின்றன' என்றார்.

'இது எங்கள் அரசரின் படமல்லவா?' என்றார்கள் அவர்கள்.

உருவ வழிபாட்டின் உண்மையை விளக்குதல்

'இது உங்கள் மகாராஜாவே அன்று. அவரைப் போன்ற பிரதிபிம்பம். ஆயினும், இந்தப் படத்திற்கு நீங்கள் மரியாதை காட்டு கிறீர்கள். அதைப் போலவே, கல்லையும் மண்ணை யும் உலோகத்தையும் கடவுள் என்று யாரும் கருதுவதும் இல்லை; வணங்குவதும் இல்லை.

சிலைகள் என்னும் சின்னங்கள் மூலம் கடவுளை நினைக்கிறார்கள்; வணங்குகிறார்கள். இது சரியல்லவா?' என்று கேட்டு விவேகானந்தர் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார்.

அரசரின் ஆணவம் அழிந்தது. அவர் சுவாமிகளைப் பார்த்து, 'சுவாமிகளே, நான் இது வரை மூடனாய் இருந்துவிட்டேன். இப்போது தான் உண்மையை உணர்ந்தேன்' என்றார்.

'துறவிக்கு வேந்தனும் துரும்பு' என்பதைச் செயலில் காட்டிய விவேகானந்தரை மக்கள் பாராட்டினர்; சுவாமிகளின் நுண்ணிய அறிவையும் போற்றினர். அத்தகைய துணிவு மிக்கவர் விவேகானந்தர்.

சென்ற இடமெல்லாம் புகழ்

சில நாள்களுக்குப் பிறகு அவர் அங்கிருந்து புறப்பட்டார். பம்பாய், பூனா முதலிய நகரங்களுக்குச் சென்றார். அங்கெல்லாம் விவேகானந்தரின் புகழ் ஓங்கியது. இந்து மதத் தத்துவத்தை ஆழ்ந்து கற்றிருந்த அவரை அனைவரும் பாராட்டினர். அவரது ஆங்கிலப் பேச்சு அனைவரையும் ஈர்த்தது. சென்ற இடமெல்லாம் அவர் புகழ் பரவியது.

பின்னர், அவர் இந்தியாவின் தென் பகுதியை நோக்கிப் பயணமானார். வழியில் பல அற்புதங்கள் நிகழ்ந்தன.

மைசூர் மகாராஜாவின் அறிமுகம்

மைசூரில் விவேகானந்தர் சில மாதங்கள் தங்கினார். அப்போது மைசூர் மகாராஜா

அறிமுகப்படுத்தப்பட்டார். இந்து சமயம் குறித்து இருவரும் அடிக்கடி உரையாடினர்கள். விவேகானந்தரின் ஞானமும் அபார அறிவும் மகாராஜாவைக் கவர்ந்தன. அனைத்து மத மாநாடு ஒன்று அமெரிக்காவில் நடைபெற இருந்தது. அந்த மாநாட்டிற்கு இந்து மதத்தின் சார்பில் ஒருவர் செல்ல வேண்டும். அதற்குத் தகுந்தவர் விவேகானந்தர் என்பதே மகாராஜா வின் முடிவு. அம்முடிவை அவர் விவேகானந் தரிடம் கூறினர். 'இறைவன் விருப்பப்படி நடக் கட்டும்' என்று விவேகானந்தர் கூறிவிட்டார்.

குமரி எல்லையில் விவேகானந்தர்

அதன் பிறகு விவேகானந்தர் கேரளம் சென்றார். அங்கும் அடியார் பலரும் அறிஞர் பலரும் அறிமுகமாயினர். அங்கிருந்து அவர் கன்னியாகுமரிக்குச் சென்றார்.

'ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய்ப் பாரதம் பக்தி மார்க்கத்தில் சிறந்து விளங்கி வந்துள்ளது. அறவாழ்வே இந்தியாவின் இலட்சியமாய் அமைந்திருக்கிறது. அறம் சிறந்து விளங்கிய காலத்தில் பாரதம் மேன்மை பெற்றுத் திகழ்ந்தது. இன்றோ அறம் குறைந்து மறம் பெருகிற்று; அதனல் கேடு நிறைந்தது; மக்கள் மேனாட்டுப் பண்பாட்டில் மயங்கிக் கிடக் கின்றனர். இந்த நிலை மாற வேண்டும். அறம் தழைக்க வேண்டும். இது குறித்து மேனாட்டில் பேச வேண்டும். அதன் பிறகே பாரதத்தின் மேன்மை பாரெங்கும் பரவும். இந்தியத்

திருநாடும் சீர்படும்; இந்தியர் வாழ்வும் செம்மை பெறும்' என்று சுவாமிகள் மனத்துள் நினைத்தார்கள்.

கன்னியாகுமரியில் கடுந்தவம்

மக்கள் நலனைக் கருதி சுவாமி விவேகானந்தர் கன்னியாகுமரிமுனையில் இரண்டு நாள்கள் கடுந்தவம் இருந்தார். பின்னர், அவர் அங்கிருந்து புறப்பட்டார். சுவாமி விவேகானந்தர் தவம் இருந்த பாறையில்தான் இன்று எடுப்பான நினைவு மண்டபம் எழுப்பப்பட்டுள்ளது.

சேதுபதியின் வேண்டுகோள்

கன்னியாகுமரியிலிருந்து அவர் சென்னை நோக்கிப் பயணம் ஆனார். வழியில் மதுரை, இராமநாதபுரம், இராமேசுவரம் ஆகிய இடங்களில் தங்கினார். இராமநாதபுரம் மன்னர் சேதுபதியின் அறிமுகம் கிடைத்தது. 'சுவாமி, தாங்களே அமெரிக்கா செல்ல வேண்டும்; இந்து மதத்தின் பெருமையை உலகறியச் செய்ய வேண்டும்' என்றார் சேதுபதி. அது மட்டுமன்று, பொருளுதவி செய்யவும் தயார் என்றார் சேதுபதி.

சென்னையில் விவேகானந்தர்

பின்னர், விவேகானந்தர் சென்னை சென்றார். அங்கு அவருக்குப் பெரிய வரவேற்புத் தரப்பட்டது. பல இடங்களில் விவேகானந்தர்

சொற்பொழிவு நிகழ்த்தினர். தமது சொற்பொழிவுகளில் அவர் மூடப்பழக்கங்களைச் சாடினர். அதைக் கேட்டவர்கள் அனைவரும் மெய்ம்மறந்தார்கள்.

அன்பர்கள் நிதி திரட்டினர்கள்; திரட்டிய தொகையை விவேகானந்தரிடம் வழங்கினர்கள்; அமெரிக்கா செல்லுமாறு பணிவுடன் கேட்டுக் கொண்டார்கள்.

சிகாகோவில் சமய மாநாட்டுப் பேச்சு

வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட விவேகானந்தர் அமெரிக்கா சென்ருர். சிகாகோ நகரில் நடந்த சமய மாநாட்டில் கலந்துகொண்டார்.

பேசுவதற்காக அவருக்கு அளிக்கப்பட்ட நேரம் மூன்று நிமிடங்கள் மட்டுமேயாகும். அவர் எழுந்து பேசத் தொடங்கினர். 'சகோதர சகோதரிகளே!' என்று தொடங்கினர். அப்போது அங்குக் கூடியிருந்த மக்கள் எழுப்பிய கரவொலி அடங்கப் பல நிமிடங்கள் ஆயிற்று. பிறகு அவர் தொடர்ந்து பேசினர்; இந்து சமயப் பெருமைகளை எடுத்து அலசினர். இந்தியாவின் பழமைச் சிறப்புகளை விளக்கினர்; அவருடைய சொற்பொழிவைக் கேட்டு மக்கள் மயங்கினர்; செய்தித்தாள்கள் வானளாவப் புகழ்ந்தன.

அன்றே அவருடைய புகழ் அமெரிக்கா முழுதும் பரவியது. அதன் பின்னர் அவர் பல

இடங்களில் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்; பலர் விவேகானந்தருடைய சீடர்கள் ஆயினர்.

ஐரோப்பாவிலும் இந்து மத விளக்கம்

பின்னர், அவர் ஐரோப்பா சென்ருர். அங்குச் சில ஆண்டுகள் தங்கினர்; இந்து மதம் பற்றி விரிவுரைகள் பல ஆற்றினர். பிறகு, இந்தியாவுக்குத் திரும்பினர். அவருடன் மேனுட்டு மாணவர் சிலரும் மாணவி ஒருவரும் வந்தனர். அந்த மாணவிதாம் சகோதரி நிவேதிதை. அவர் ஓர் ஆங்கில மாது.

ஸ்ரீ இராமகிருஷ்ண மடம் நிறுவுதல்

இந்தியாவுக்குத் திரும்பிய விவேகானந்தர் தம் நண்பர்களைச் சந்தித்தார். இராம கிருஷ்ணரின் பெயரால் இயக்கமொன்று ஏற்படுத்த விரும்பினர். அது குறித்துத் தம் நண்பர்களுடன் கலந்து பேசினர். அவர்களும் அந்தக் கருத்தை ஆதரித்தார்கள். இராம கிருஷ்ணர் பெயரால் சத் சங்கம் ஒன்று நிறுவப் பட்டது. அதுவே 'ஸ்ரீ இராமகிருஷ்ண மடம்' எனப் பெயர் பெற்றது. பக்தி மார்க்கத்தைப் பரப்ப வேண்டும்; மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும். இவை இரண்டுமே இராம கிருஷ்ண மடத்தின் நோக்கங்களாகும்.

பேலூர்த் தலைமை மடம்

பேலூர் என்பது ஒரு சிற்றூர். அது கல்கத்தாவுக்கு அண்மையிலே கங்கையாற்றங்

கரையில் அமைந்துள்ளது. வெள்ளம் கரை புரண்டு ஓடும் கங்கையாற்றங்கரையில் பதினைந்து ஏக்கர் நிலம் வாங்கப்பட்டது. அதற்குத் தேவையான நிதியை விவேகானந்தரின் மேனாட்டுச் சீடர்கள் தந்தார்கள். அந்த நிலத்தில் காட்சிக்கினிய கட்டடம் ஒன்று எழுப்பப்பட்டது. அங்கு இராமகிருஷ்ணரின் திருவுருவம் வைக்கப்பட்டது. அந்த இடமே இன்றும் இராமகிருஷ்ண மடங்களுக்குத் தலைமை மடமாய் இலங்குகிறது.

மீண்டும் மேனாட்டுப் பயணம்

மீண்டும் விவேகானந்தர் அமெரிக்கப் பயணத்தை மேற்கொண்டார். அப்போது அங்கு அவரிடம் 160 ஏக்கர் நிலம் நன்கொடையாக வழங்கப்பட்டது. விவேகானந்தர் அந்த இடத்தில் ஓர் ஆசிரமத்தை நிறுவினார்; தமது மாணவர்களுக்கு யோகம் பயிற்றுவித்தார்; தத்துவம் புகட்டினார். பிறகு, ஐரோப்பா வழியாக இந்தியா திரும்பினார்.

இராமகிருஷ்ண இயக்கம்

இராமகிருஷ்ண மடத்தின் கிளைகள் இந்தியாவில் பல இடங்களிலும் அமைக்கப்பட்டன. மயிலாப்பூரில் உள்ள இராமகிருஷ்ண மடமும் அப்போதுதான் நிறுவப்பட்டது.

இராமகிருஷ்ணரின் கொள்கைகளைப் பரப்பப் பத்திரிகைகள் தொடங்கப்பட்டன.

விவேகானந்தரின் விருப்பப்படியே அந்த இதழ்கள் பாங்குற வெளியிடப்பட்டன.

இராமகிருஷ்ண மடங்கள் ஆல் போல் தழைக்கலாயின. மக்கள் நெஞ்சில் இராமகிருஷ்ணரின் பக்தி மார்க்கம் இடம் பெறலாயிற்று.

தமது பணி முடிந்துவிட்டது என்பதை விவேகானந்தர் உணர்ந்தார். தாம் இந்த உலகை விட்டுச் செல்வதற்கு ஆயத்தமானார். பொறுப்புகளைப் பலரிடமும் பகிர்ந்து அளித்தார். சீடர்களுக்கு அறிவுரை கூறினார். அறை ஒன்றினுள் சென்று தியானத்தில் ஆழ்ந்தார். அதன் பிறகு அவர் வெளியில் வரவே இல்லை. ஆம்! பரம்பொருளுடன் இரண்டறக் கலந்து விட்டார் அவர்!

———